**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. CC. 39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Additional witness | | Prosecution | : P.W-6, L.W-12 |
| Name | : சிவகுருநாதன் SSI | Defence : | |
| Father Name | : ராஜரத்தினம் | Court | : |
| Village | : பூம்புகார் PS. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | :57/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.01.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பூம்புகார் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் திருவெண்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் நிலைய பொறுப்பில் இருந்த போது கடந்த 02.06.2019 ம் தேதி 13.00 மணிக்கு தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நெய்தல்வாசல் வீரமேட்டு தெருவை சேர்ந்த நாராயணசாமி மகன் சதாசிவம் என்பவர் பேச முடியாத நிலையில் சிகிச்சையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி லதா என்வரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.63/2019 U/s.279, 337 IPC படி வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் கொடுத்த புகார் மனு அசாஆ.1 ஆக அசா.1 ன் மூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அசாஆ.4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் விசாரணையை எடுத்துகொண்ட நான் கடந்த 02.06.2019 ம்தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று அங்கு சாட்சிகள் கண்ணன் மற்றும் ராஜேந்திரன் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம்

தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அசாஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.6 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 82Y5893 அசோக் லே லேண்ட் என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தையும் இந்த வழக்கில் விபத்துக்குள்ளான PY 02D2931 TVS XL Super என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் வாகன தணிக்கைக்காக வாகன தணிக்கை ஆய்வாளர் ராம்குமாருக்கு கடிதம் வைத்து அனுப்பினேன். பின்னர் இந்த வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 07.06.2019 ந்தேதி காலை 10.00 மணியளவில் திருவெண்காடு காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து பின்னர் தக்க இருநபர் ஜாமீனில் காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் கடந்த 08.07.2019 ந்தேதி அன்று சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த இந்த வழக்கு விபத்தில் காயம் பெற்ற சதாசிவம் இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் இந்த வழக்கினை மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜரில்லை.**

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**